பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

04 07 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தீவிரவாதத்தை எந்த வடிவிலும் நியாயப்படுத்த முடியாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. மேட்டுப்பாளையம் - கோவை இடையே இரட்டை இருப்புப்பாதை அமைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன், ரயில்வே அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
3. தமிழகத்தில் கள்ளச்சாராய உயிரிழப்புகள் தொடர்வது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக கூறியுள்ளது.
4. நீட் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட திமுக அரசு தயங்குவது ஏன் என்று பிஜேபி வினவியுள்ளது.
5. உலக **Cadet** செஸ் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

இனி விரிவான செய்திகள்----

<<<<<<>>>>>

தீவிரவாதத்தை எந்த வடிவிலும் நியாயப்படுத்த முடியாது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்றுவரும் ஷாங்காய் ஒத்துழைப்புக்கான உச்சிமாநாட்டில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் வாசித்த பிரதமர் உரையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளை சர்வதேச சமுதாயம் தனிமைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இளையோர் தவறான பாதைக்கு செல்வதை தடுக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் தகவல் தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

மேட்டுப்பாளையம் முதல் கோவை ரயில் நிலையம் வரை இரட்டை இருப்புப்பாதை அமைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவை வலியுறுத்தியுள்ளார்.
இன்று புதுதில்லியில் ரயில்வே அமைச்சரை நேரில் சந்தித்த திரு எல். முருகன் இதுதொடர்பான கோரிக்கை மனுவையும் சமர்ப்பித்தார்.

<<<<<<>>>>>

தூய்மைப் பணியாளர்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவுறுத்தியுள்ளதாக தேசிய தூய்மைப்பணியாளர் ஆணையத்தின் தலைவர் திரு வெங்கடேசன் கூறியுள்ளார்.

இன்று தருமபுரியில் இதுதொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தூய்மைப்பணியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

சீருடை, காலணி, கையுறை போன்ற உபகரணங்கள் முறையாக வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு வெங்கடேசன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்வது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கள்ளக்குறிச்சி சம்பவத்தின் சுவடு மறைவதற்குள் விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் காரணமாக ஒருவர் உயிரிழந்ததாக வெளியான செய்திகளை குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான காணொலி காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட பின்னரும் உரிய நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

நீட் தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிட திமுக அரசு தயங்குவது ஏன் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு அண்ணாமலை வினவியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் யாருக்கும் எதிரானது அல்ல என்றும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

அரசியல் ஆதாயத்திற்காக நீட் விவகாரத்தை திமுக பயன்படுத்துவதாகவும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசே மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தையடுத்த தைலாபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் புரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கள்ளச்சாராய உயிரிழப்புகள் தொடர்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திரு ராமதாசு தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி 97 வயது சுதந்திரப்போராட்ட தியாகிக்கு ஓய்வூதிய பாக்கியை வழங்காத பொதுத்துறை கூடுதல் செயலருக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை விசாரணை செய்த நீதிபதி திருமதி அனிதா சுமந்த், இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரியை சென்னை மாநகர காவல்துறை ஆணையர் வரும் 8–ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக வரும் 8–ஆம் தேதி ரஷ்யா செல்கிறார்.

ரஷ்யா அதிபர் திரு விளாடிமீர் புட்டினின் அழைப்பை ஏற்று பிரதமர் இந்த பயணத்தை மேற்கொள்வதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், சர்வதேச பிர்ச்சினைகள் குறித்தும் பிரதமர் விவாதிக்க உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பயணத்தை முடித்துக்கொண்டு திரு நரேந்திர மோடி வரும் 9-ஆம் தேதி ஆஸ்திரியா செல்கிறார்.

41 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய பிரதமர் ஆஸ்திரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

மாஸ்கோ மற்றும் வியன்னாவில் இந்திய வம்சாவளியினருடனும் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் நீதிமன்றங்களில் கட்டமைப்பு வசதிகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் பங்குச்சந்தை மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கான புதிய அலுவலகத்தை இன்று திறந்துவைத்து அவர் பேசினார்.

தீர்ப்பாயங்கள் மற்றும் நடுவர் மன்றங்களுக்கான கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

நீதியை விரைவாக வழங்குவதற்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது என்றும் திரு சந்திரசூட் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் கர்ப்பிணி பெண்களின் நலனுக்கான திட்டங்கள் உள்ளிட்ட ஆறு முக்கிய திட்டங்கள் பயனாளிகளை முழுமையாக சென்றடைவதை உறுதி செய்வதற்கான பிரச்சார இயக்கத்தை நித்தி ஆயோக் தொடங்கியுள்ளது.

கர்ப்பிணி பெண்களுக்கான நலத்திட்டங்கள், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ உதவிகள், மண்வள அட்டைகள் விநியோகம், சுயஉதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி, மின் வசதி மற்றும் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நிலக்கரித்துறை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மே மாதத்தில் எட்டு முக்கிய தொழில்துறைகளின் வளர்ச்சிக் குறியீட்டில் அதிகபட்சமாக நிலக்கரித்துறை பத்து புள்ளி இரண்டு சதவீதம் வளர்ச்சியை எட்டியுள்ளது.

சிமெண்ட், கச்சா எண்ணெய், மின்சாரம், உரம், இயற்கை எரிவாயு, எண்ணெய் சுத்திகரிப்பு, எஃகு மற்றும் நிலக்கரி உள்ளிட்ட எட்டு துறைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி கடந்த மே மாதத்தில் ஆறு புள்ளி மூன்று சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளன.

<<<<<<>>>>>

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

<u>(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் - 46 செகண்ட்ஸ்)</u>

<<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் கல்வித்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மன்ற ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கான புத்தாக்க பயிற்சி பாச்சலில் உள்ள பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

------------------

கோவையில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து இன்று அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

--------------------

இணையதள மோசடி மற்றும் குழந்தை பாதுகாப்பிற்கான குறும்பட போட்டியில் சேலம் மாநகர காவல்துறை முதலிடத்தை பிடித்தது.

------------

வேலூர் மாவட்டத்தில் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களிலும் அதிக அளவு மரக்கன்றுகளை நட வனத்துறை திட்டமிட்டுள்ளது.

-------------------

ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் தேனி வளர்ப்பு குறித்த கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

---------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

விளையாட்டுச் செய்திகள்

உலக டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியினரின் வெற்றிப்பேரணி மும்பையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது

மரைன்ட்ரைவிலிருந்து, வான்கடே மைதானம் வரை இந்திய அணி திறந்தவெளி பேருந்தில் அழைத்து செல்லப்படவுள்ளது.

இதனையொட்டி, பல்லாயிரக்கணக்கானோர் மழையையும் பொருட்படுத்தாமல் அந்த வழித்தடத்தில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

இந்த வெற்றிப் பேரணி முடிவடைந்தவுடன், வான்கடே மைதானத்தில் இந்திய அணிக்கு பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

--------------------

உலக **Cadet** செஸ் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜார்ஜியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 12 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Pratitee Bordoloi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Sattwik Swain** வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 6-4 என்ற செட் கணக்கில் கஜகஸ்தானின் **'Alexander Bublik – Shevchenko** இணையை வென்றது.

**<<<<<<END>>>>>**